

தூத்துக்குடியில் இறகுப்பந்து உள்விளையாட்டரங்கத்தை கனிமொழி கருணாநிதி எம்.பி. திறந்து வைத்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். இதில் அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில்

# இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, ஆக். 30 -

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. கழகத்திற்கு உட்பட்ட நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழக அளவிலான இளைஞரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு நேர் காணல் குறித்து மாவட்டச் செயலாளர் திருமதி.பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க. கழக தலைவரும், தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைக்கு ஏற்ப மாநில இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் தூத்துக்குடி மாநகர தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட்டனர்.

அதன் தொடர்ச்சியாக நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழக அளவிலான இளைஞரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட இருக்கிறார்கள். அதன்படி வருகிற 03.11.2023 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி அளவில் தூத்துக்குடி கலைஞர் அரங்கில் வைத்து மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் முன்னிலையில் இந்த நேர்காணல் நடைபெற இருக்கிறது.

இதில் நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்பிற்கு ஏற்கனவே விண்ணப்பம் செய்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வருகை தரும் அனைவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அடையாள அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞரணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கனவே பணியாற்றியிருந்தால் அது தொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களை கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் ராஜுக்கள் கல்லூரியில், மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமும் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் மற்றும் இராஜ பாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன் ஆகியோர் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.







